2023 அக்டோபர் 10]

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2023), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) சீட்டு நிதி (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு சீட்டு நிதி (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2023), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.